முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.4.2025) தலைமைச் செயலகத்தில், தங்கச்சிமடம், நாகப்பட்டினம், பாம்பன், இராமேஸ்வரம், மண்டபம் ஆகிய மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் மகளிர் கூட்டமைப்பினர் சந்தித்து, மீனவ பெருமக்களின் நல்வாழ்விற்காக 576 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு புதிய திட்டங்கள் குறித்து நேற்று முன்தினம் சட்டப்பேரவையில் அறிவித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், நாகை மாலி, முகமது ஷா நவாஸ், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் தலைவர் ந.கௌதமன், மாநில மீனவ அணிச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் உள்ளனர்.

தமிழ்நாட்டின் பெருமையை தொடர்ந்து பாதுகாத்து வரும் தமிழ்நாடு முதல்வருக்கு - சட்டப்பேரவையின் சார்பில் நன்றி!

சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு உரை!

சென்னை, ஏப். 10 – தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல்பாடுகள்அனைத்தும் சட்ட விரோதம் என, நேற்று முன்தினம் உச்சநீதிமன்றம் வரலாற்றுப் சிறப்புமிக்க தீர்ப்பு வழங்கியதையடுத்து சட்டப் பேரவையில் நடைபெற்ற விவாதத்தின் நிறைவாகப் பேசிய பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள், ''தமிழ்நாட்டின் பெருமையை தொடர்ந்து பாதுகாத்து வரும் முதல்வருக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டார்.

இது குறித்து பேரவைத் தலைவர் அவர்கள் கூறியதாவது:-

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றம், பல சாதனைகளைப் படைத்தது, அனைவரும் அறிந்தது. முதன்முதலாக இந்தியாவிலேயே 1921 ஆம் ஆண்டில் தான், இதே மாமன்றம் தான், பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையைப் பெற்றுக் கொடுத்தது. மறைந்த தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சியில், இந்த மாமன்றம்தான் "தமிழ்நாடு" என்று பெயர் வைத்துக்கொடுத்தது. மறைந்த தலைவர் கலைஞர் அவர்கள் தான், பெண்களுக்கு சொத்தில் சம பங்கு உண்டு, குடிநீர் வடிகால் வாரியம் போன்ற பல சாதனைகளை நிகழ்த்தியிருந்தாலும், இன்றைய முதல்வர் அவர்களது அரசுதான், எந்தப் பிரச்சினை யாக இருந்தாலும், அனைத்தையும் அரசியல் சட்டத்திற்குட்பட்டு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்கின்ற நோக்கத்தோடு, அனைத்துப் பணிகளையும் செய்து வந்தது. அதனுடைய தொடர்ச்சியாகத் தான், இன்று உச்ச நீதிமன்றம் இவ்வளவு பெரிய வெற்றியைக் கொடுத்திருக்கின்றது. ஏற்கெனவே, அனைவரும் சொன்னதுபோன்று, ஒரு ஆளுநர், ஒரு அமைச்சரவை எழுதிக் கொடுப்பதை மட்டும்தான் சட்டமன்றப் பேரவையில் வாசிக்கின்ற உரிமை உண்டு என்பதை இந்த சட்டமன்றத்தில்தான், நம்முடைய முதல்வர் அவர்கள் தான் இந்தியாவிற்கே வழிகாட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல்தான், இப்போதும், ஒரு சட்டம், சட்டமன்றப் பேரவையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றி, அதன் அனுமதிக்காக ஆளுநருக்குச் சென்று, அவர் திருப்பி அனுப்பினால், மீண்டும் அதை நிறைவேற்றிக் கொடுத்தால், அதை ஆளுநர் தடையின்றி உடனடியாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் நீதியைப் பெற்றுத் தந்த முதலமைச்சர் அவர்களை இப்பேரவையின் சார்பாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தப் பேரவை சார்பாக, இந்தப் பேரவையில் இருக்கின்ற ஒவ்வொருவருக்கும் இந்தப் பெருமை சேர்ந்திருக்கிறது. இந்தநேரத்தில் நான் ஒன்றை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். இப்போது இரண்டாவது முறையாக சட்டமன்றத்தில் நிறைவேற்றிக் கொடுத்த தீர்மானத்தில், நாகப்பட்டினத்தில் இயங்கி வருகின்ற மீன்வளப் பல்கலைக்கழகத்திற்கு அம்மையார் ஜெயலலிதா அவர்களின் பெயரை வைக்க வேண்டும் என்று உங்களுடைய ஆட்சிக் காலத்தில் தீர்மானம் நிறைவேற்றி, ஆளுநர் அவர்களுக்கு அனு ப்பப்பட்டு கிடப்பில் கிடந்தது. இதே சட்டமன்றத்தில் அந்தப் பல்கலைக்கழகத்திற்கு அம்மையார் ஜெயலலிதா அவர்களின் பெயரை வைக்க வேண்டும் என்று மீண்டும் இரண்டாவது முறையாக தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியது இன்றைய முதல்வர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு நன்றி சொல்வதற்கு தயக்கம் காட்டுவதுதான் வேதனையான விஷயமாக இருக்கிறது என்பதை மட்டும் கூறி, இந்த அளவில் முதல்வர் அவர்களின் எண்ணமும், சிந்தனையும் 24 மணிநேரமும் தன்னுடைய கட்சி என்றும், தான் என்றும் இல்லாமல் இந்த சமூகத்திற்காக, தமிழ்நாட்டிற்காக உழைத்து, தமிழகத்தினுடைய பெருமையைத் தொடர்ந்து பாதுகாத்து வருகின்ற முதல்வர் அவர்களுக்கு இந்த சபை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு பேரவைத்தலைவர் அவர்கள் உரையாற்றினார்.

உச்சநீதிமன்றத் தீர்ப்பு ஆளுநரின் ஆணவத்தின் மீது வீழ்ந்த சம்மட்டி அடியாகும்!

மாநில உரிமைகளை மீட்பதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் விண்ணளவு உயர்ந்துள்ளார்!

விவசாயிகள் – தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை!

சென்னை, ஏப். 10 -

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட 10 மசோதாக்களை ஒப்புதல் அளிக்காமல் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் நீண்ட காலம் நிறுத்தி வைத்தும், பின்னர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்ததும் சட்டவிரோதம் எனவும் அரசியல் சாசனத்திற்கு எதிரானது எனவும் உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பானது ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களின் தான்தோன்றித்தனமான ஆணவத்திற்கு கிடைத்த சம்மட்டி அடியாகும்.

தன்மானமும், சுயமரியாதையும் கிஞ்சித்தள வேனும் ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களுக்கு இருக்குமேயானால் அவர் உடனடியாக ராஜ்பவனை விட்டு வெளியேற வேண்டும். அல்லது அவரை நியமனம் செய்தவர்கள் வெளியேற்றிட வேண்டும்.

ஆர்.என்.ரவி அவர்கள் ஆளுநராக பொறுப்பேற்ற நாள் முதல் தமிழ்நாடு அரசோடு தொடர்ந்து மோதல் போக்கை கடைபிடித்து வந்துள்ளார். அரசியல் சட்டத்தின் மீது உறுதி எடுத்துக் கொண்ட அவர் அரசியல்வாதியை போன்று சனாதனம் பேசுவது, மொழிப் பிரச்சினையில் மோதல் போக்கை உருவாக்குவது, தமிழ்நாட்டின் பெயரையே தமிழகம் என மாற்ற முயற்சிப்பது இப்படி அடாவடித்தனத்தின் உச்சத்திற்கு சென்றார். தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை பிரதி பலிக்கும் வகையில் சட்டப்பேரவையில் நிறைவேற்றுகிற மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க மறுத்து வந்தார்.

இந்த நிலையில்தான் தமிழ்நாடு அரசு பல்கலைக் கழகங்களில் வேந்தர் நியமனம் சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட 10 மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் ஆண்டு கணக்கில் கிடப்பில் போட்டு இறுதியாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தார். இதனை எதிர்த்து தமிழ்நாடு அரசும், முதல்வர் சட்டப் போராட்டத்தை தொடங்கினர். அந்தப் போராட்டத்தில் உச்சநீதிமன்றம் நேற்று முன்தினம் (08.04.2025) அதிரடியான வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பினை வழங்கி உள்ளது.

ஆளுநர் அமைச்சரவையின் ஆலோசனைப்படி நடக்க வேண்டியவர். அவருக்கென்று எந்த தனி அதிகாரம் எதுவுமில்லை. அவருடைய செயல்பாடுகள் சட்டத்தை மீறியதாகவும், உள்நோக்கம் கொண்டதாகவும் உள்ளது. இவரது போக்கு அரசியல் சாசனத்திற்கு எதிரானது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது. இந்த தீர்ப்பு தமிழ்நாடு முதலமைச்சருக்கு கிடைத்த மகத்தான வெற்றியாகும். மொழி பிரச்சினையாக இருந்தாலும், சமூகநீதி பிரச்சினையாக இருந்தாலும், தொகுதி வரையறை உள்ளிட்ட மாநில உரிமைகள் சார்ந்த எந்த பிரச்சினையாக இருந்தாலும் அதில் இந்தியாவிற்கு தலைமை தாங்கக்கூடிய அளவிற்கு செயல் படக்கூடிய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றைக்கு ஆளுநர்களின் நடவடிக்கை குறித்தும், இந்தியாவிற்கான ஒரு அரிய தீர்ப்பை பெற்றுக் கொடுத்து, விண்ணளவிற்கு உயர்ந்து நிற்கிறார். இந்தத் தீர்ப்பின் மூலம் இந்திய இறையாண்மை, அரசியல் அமைப்பு சட்டம், தேச ஒற்றுமை பாதுகாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் மசோதாக்களை ஆளுநர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தது சட்ட விரோதம் மட்டுமல்ல, அரசியல் சாசனத்திற்கு எதிரானது என்று கூறி அதை ரத்து செய்து, மசோதாக்களுக்கு உச்ச நீதிமன்றம் ஒப்புதல் அளித்ததன் மூலம் ஆளுநர் ஜனாதிபதியை அவமதிப்பிற்கு உள்ளாக்கிவிட்டார்.

ஆளுநர்களுக்கு மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு காலக்கெடுவை உச்சநீதிமன்றம் நிர்ணயித்துள்ளது வரவேற்கத் தக்கதாகும். இது இந்தியா முழுவதும் உள்ள மாநிலங்களுக்கு ஆளுநரின் செயல்பாடுகள் குறித்து ஒரு தெளிவான விளக்கத்தை, புரிதலை அளித்துள்ளது.

ஆளுநருக்கு அரசியல் சாசனப் பிரிவு 200ன் கீழ் எந்த தனிப்பட்ட அதிகாரமும் இல்லை என்பதை தெளிவுபடுத்தி உள்ளது. இந்த மகத்தான தீர்ப்பு ஜனநாயகத்தை, கூட்டாட்சி தத்துவத்தை வளர்த்தெடுப்பதற்கான ஒரு வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பாகும்.

இவ்வாறு பொன்குமார் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் தமிழ்நாடு சட்டமன்றத்தில் இயற்றப்பட்ட மசோதாக்களை தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கு எதிராகவும், அரசியலமைப்பு சட்டத்திற்கு விரோதமாகவும், நிறுத்தி வைத்திருந்த ஆளுநருக்கு எதிராக, தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ளதால் பழனிசெட்டிபட்டி பஸ் நிலையத்தில் தேனி வடக்கு ஒன்றிய கழக செயலாளர் முன்னாள் சேர்மன் சக்கரவர்த்தி தலைமையில் பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கி கொண்டாடினார். உடன் தேனி வடக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் முருக ஜெகதீசன் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

ஒரு கோடியே 10 லட்சம் மதிப்பில் சிங்கம்புணரி - சிதம்பரம் - கம்பம்- பெரியகுளத்தில் தொடக்க வேளாண்மை வங்கிகளுக்கு புதிய கட்டிடங்கள்!

கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்புகள்...

6 ஆம் பக்கத் தொடர்ச்சி

டன் அறுவடைக்குப் பிந்தைய இழப்புக்களைக் குறைக்கவும் விளைபொருட்கள் விநியோகத்தின் ஒட்டுமொத்த செயல்திறனை மேம்படுத்தவும் கோயம்பேடு குளிர்பதனக் கிடங்கு ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் பொலிவூட்டப்படும்.

39. **ரூபாய் இருபத்தாறு இலட்சம் மதிப்பீட்டில் மூன்று பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன நாணய மற்றும் கடன் சங்கங்கள் நவீனமயமாக்கப்படும்.**

உறுப்பினர்களுக்கு மேம்படுத்தப்பட்ட சேவைகளை வழங்கிடும் வகையில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் தமிழ்நாடு மின்வாரிய பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன, நாணய மற்றும் கடன் சங்கம் ரூ.11 இலட்சம் மதிப்பீட்டிலும், தூத்துக்குடி மாவட்டம் லாயல் மில் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன, நாணய மற்றும் கடன் சங்கம் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டம் பெருந்துறை பொதுப்பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன, நாணய மற்றும் கடன் சங்கம் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டிலும், மொத்தம் ரூ.26 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.

40. **கூட்டுறவுத் துறையின்கீழ் செயல்படும் 2,500 நியாய விலைக் கடைகள் பொலிவூட்டப்படும்.**

அனைத்து மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் பொது விநியோகத் திட்டத்தின்மூலம் அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்க கூட்டுறவுத் துறையின் கீழ் நியாய விலைக் கடைகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. நியாய விலைக் கடைகள்மூலம் குடும்ப அட்டைதாரர்கள் சிரமமின்றி அத்தியாவசியப் பொருட்களைப் பெற 2,500 நியாய விலைக் கடைகள் பொலிவூட்டப்படும்.

41. **கூட்டுறவுத் துறையின்கீழ் செயல்பட்டு வரும் 5,000 நியாய விலைக் கடைகளுக்கு ISO தரச் சான்றிதழ் பெறப்படும்.**

கூட்டுறவுத் துறையின்கீழ் செயல்பட்டு வரும் நியாய விலைக் கடைகளில் பொது மக்களுக்கு சிறப்பான சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. முழுமையான தர மேலாண்மையை உறுதி செய்யும் பொருட்டு 5,000 நியாய விலை கடைகளுக்கு ISO 9001 மற்றும் ISO 28000 போன்ற தர சான்றிதழ்கள் பெறப்படும்.

42. **பணியாளர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களின் நலனைப் பாதுகாக்க "இடர் களையும் நிதி" (Risk Alleviation Fund) உருவாக்கப்படும்.**

பணியாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் தவிர்க்க முடியாத இடர்பாடுகளால் ஏற்படும் வாராக்கடன் மற்றும் நிதி இழப்புகளைக் குறைக்கவும், பிணையதாரர்களின் நிதி நலனைப் பாதுகாக்கவும் "இடர் களையும் நிதி" உருவாக்கப்படும். வாரிசுகள் இல்லாத உறுப்பினர்களின் மரணம், பணிநீக்கம், மருத்துவச் செயலிழப்பு முதலான காரணங்களால் ஏற்படும் இழப்பை ஈடுசெய்ய இந்நிதி பயன்படுத்தப்படும்.

43. **ரூபாய் எட்டு கோடி மதிப்பீட்டில் சென்னை தீவுத்திடலில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளாகம் கட்டப்படும்.**

சென்னை தீவுத்திடல் சத்தியவாணிமுத்து நகரில் வசித்துவரும் ஏழை எளிய மக்கள் வங்கிச் சேவைகளை எளிதாகப் பெற வங்கிக் கிளை, அவர்களுக்கு நியாயமான விலையில் தரமான நுகர் பொருட்கள் கிடைக்க சிறப்பங்காடி, தற்போது வாடகைக்

கட்டடத்தில் செயல்பட்டு வரும் சென்னை மாவட்டக் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையத்திற்கு நிரந்தர கட்டடம் ஆகிய வற்றைகொண்ட ஒருங்கிணைந்த கூட்டுறவு வளாகம் ரூ.8 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

44. **கூட்டுறவுச் சங்கங்களின் ஐநூறு உறுப்பினர்களுக்கு வெளி மாநிலங்களில் நேரடிப் பயிற்சி வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் சேவைகளை மேம்படுத்த, பிற மாநிலங்களில் சிறப்பாகச் செயல்படும் கூட்டுறவு அமைப்புகளை நேரடியாகப் பார்வையிட்டு அங்கு செயல்படுத்தப்படும் சிறந்த திட்டங்களை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தும் பொருட்டு கூட்டுறவுச் சங்கங்களின் 500 உறுப்பினர்களுக்கு வெளிமாநிலங்களில் நேரடிப் பயிற்சி அளிக்கப்படும்.

45. **ரூபாய் நான்கு கோடி மதிப்பீட்டில் உறுப்பினர் கல்வித் திட்டம் மற்றும் இளைஞர் ஈர்ப்பு முகாம் ஆகியவற்றை சிறப்பாக மேற்கொள்ள மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களுக்கு கணினி உள்ளிட்ட நவீன உபகரணங்கள் வழங்கப்படும்.**

மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் மூலமாக நடத்தப்படும் உறுப்பினர் விழிப்புணர்வு முகாம், இளைஞர் ஈர்ப்பு முகாம் மற்றும் கூட்டுறவு சேவைகள் குறித்து பொதுமக்களிடம் எடுத்துச்செல்ல அனைத்து மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களுக்கும் கணினி, படக்காட்டி, நிழற்படக் கருவி மற்றும் வாகனம் போன்றவை ரூ.4 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

46. **கூட்டுறவு இயக்கத்தில் இளைய தலைமுறையினரை அதிக அளவில் பங்கு பெறச்செய்ய சமூக ஊடகங்கள் வாயிலாக விழிப்புணர்வு, பள்ளி மற்றும் கல்லூரிகளில் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.**

பள்ளி கல்லூரிகளில் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் மற்றும் சிறப்பு முகாம்கள் நடத்தி கூட்டுறவு அமைப்புகள் குறித்த விழிப்புணர்வை இளம் தலைமுறையினரிடையே உருவாக்கியும், நவீன வங்கிச் சேவைகளை அறிமுகப்படுத்தியும் மாணவ, மாணவியருக்கு கூட்டுறவு வங்கிகளில் சேமிப்புக் கணக்கு, தொடர் இட்டு வைப்புக் கணக்கு போன்றவை தொடங்கப்படும். இளம் தலைமுறையினரைக் கவரும்வண்ணம் கூட்டுறவு அமைப்புகள் வழங்கும் நவீன சேவைகள் குறித்த தகவல் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் கொண்டு செல்லப்படும்.

47. **சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2025ஐ முன்னிட்டு மாபெரும் கூட்டுறவு கண்காட்சி நடத்தப்படும்.**

சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2025ஐ முன்னிட்டு, நமது மாநிலக் கூட்டுறவுகளின் சிறப்பம்சங்களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையிலும், கூட்டுறவுகளின் சிறந்த செயல்பாடுகளைப் பகிரவும், கூட்டுறவு அமைப்புகளின் தரமான தயாரிப்புகளைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்திடவும் அனைத்து மாநிலங்களைச் சேர்ந்த கூட்டுறவு அமைப்புகளும் பங்குபெறும்வண்ணம் இந்திய அளவிலான கூட்டுறவுக் கண்காட்சி நடத்தப்படும்.

48. **சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2025ஐ கொண்டாடும் பொருட்டு "கூட்டுறவு மாரத்தான்" நடத்தப்படும்.**

கூட்டுறவுச் சங்கங்களால் ஏற்பட்டுள்ள சமூகப் பொருளாதார மேம்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், கூட்டுறவு அமைப்புகள் வழங்கி வரும் சேவைகளை அனைத்துத் தரப்பு மக்களிடையே கொண்டு சேர்க்கவும், இளைய தலைமுறையினரை கூட்டுறவு அமைப்புகளில் அதிக அளவில் பங்கேற்கச் செய்யவும் அனைத்து மாவட்டங்களிலும் "கூட்டுறவு மாரத்தான்" நடத்தப்படும்.

49. **சர்வதேச கூட்டுறவு ஆண்டை முன்னிட்டு கூட்டுறவு அமைப்புகள் மற்றும் கூட்டுறவாளர்களுக்கு சிறப்பு விருதுகள் வழங்கப்படும்.**

கூட்டுறவின் மாண்பைப் போற்றும் விதமாக ஐக்கிய நாடுகள் அமைப்பு 2025 ஆம் ஆண்டை சர்வதேசக் கூட்டுறவு ஆண்டாக அறிவித்துக் கொண்டாடி வருகின்றது. இந்தியாவிலேயே முதலாவதாகக் கூட்டுறவு சங்கம் கண்ட நமது மாநிலத்தில் பல்வேறு விதமான கூட்டுறவு அமைப்புகள் ஏழை எளிய பொதுமக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது முதல் மாவட்டங்களுக்கிடையே பரவலான பொருளாதார முன்னேற்றத்திற்கும் காரணமாக இருந்து நாட்டிற்கே முன்னோடியாகத் திகழ்ந்து வருகின்றன. இப்பெருமைக்குக் காரணமான கூட்டுறவு அமைப்புகளுக்கும் கூட்டுறவாளர்களுக்கும் சிறப்பு விருதுகள் வழங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்புகளை வெளியிட்டார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அடல் பூஜல் யோஜனா திட்ட முன்னேற்றத்தை

கண்காணிக்க அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிமுறைகள் என்ன?

மக்களவையில் கள்ளக் குறிச்சி எம்.பி.மலையரசன் கேள்வி!

புதுடெல்லி, ஏப். 10 - **மலையரசன் டி :** JAL SHAKTI அமைச்சர் மகிழ்ச்சியுடன் கூறுவாரா:

(அ) அடல் பூஜல் யோஜனா (ABY) பற்றிய விவரங்கள்;

(ஆ) ABYஐ செயல்படுத்துவதால் ஏற்படும் குறிப்பிட்ட நோக்கங்கள் மற்றும் எதிர்பார்க்கப்படும் விளைவுகளின் விவரங்கள் தமிழில் உள்ளடக்கப்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கையுடன் நாடு:

(இ) நிலத்தடி நீர் மேலாண்மை முயற்சிகளுக்காக இதுவரை ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட மொத்த நிதியின் விவரங்கள் தமிழில் ABY இன் கீழ் நாடு;

(ஈ) உள்ளூர் சமூகங்களை, குறிப்பாக விவசாயிகளை ஈடுபடுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ள விதம்

தமிழ்நாட்டின் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ABY இன் கீழ் நிலத்தடி நீர் வளங்களின் நிலையான மேலாண்மை; மற்றும்

(இ) கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ABY இன் முன்னேற்றத்தைக் கண்காணிக்க அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறை என்ன? நிலத்தடி நீர் பாதுகாப்பில் அதன் தாக்கத்தை மதிப்பிடுவதற்கு எடுக்கப்பட்ட/எடுக்கப்படும் நடவடிக்கைகளுடன் தமிழ்நாடு மற்றும்

நீர் பயன்பாட்டு நடைமுறைகள்?

பதில்

ஜல சக்திக்கான இணையமைச்சர்

(ஸ்ரீ ராஜ் பூஷன் சௌத்ரி)

(அ) இந்திய அரசு அடல் பூஜல் யோஜனாவை செயல்படுத்துகிறது, இது ஒரு மத்திய துறை திட்டமாகும், இதன் மொத்த செலவு 80 மாவட்டங்களில் உள்ள 229 நிர்வாகத் தொகுதிகள்/ தாலுகாக்களின் 8,203 நீர் பற்றாக்குறை கிராம பஞ்சாயத்துகளுக்கு (GPs) ரூ.6000 கோடி.

7 மாநிலங்களின் மாவட்டங்கள், அதாவது ஹரியானா, குஜராத், கர்நாடகா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான் மற்றும் உத்திரம் 01.04.2020 முதல் 6 வருட காலத்திற்கு பிரதேசம். திட்டத்தின் முக்கிய அம்சங்களில் சமூக அடிப்படையிலானவை அடங்கும்

நிலத்தடி நீர் தரவு கண்காணிப்பு மற்றும் பகிர்வு, திட்டமிடல், திறன் மேம்பாடு & கவனம் செலுத்திய தகவல், கல்வி & தொடர்பு (IEC) நடவடிக்கைகள்.

குறைப்பை இலக்காகக் கொண்ட நடவடிக்கைகளில் கவனம் செலுத்தும் முதல் வகையான திட்டம் இதுவாகும். நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்காக நுண்ணீர் பாசனம், பயிர் பல்வகைப்படுத்தல், குழாய்களைப் பயன்படுத்துதல் போன்ற நீர் பயன்பாடு. நீர் பட்ஜெட் மற்றும் முன்மொழிய ப்பட்ட தேவைப் பக்கத்தைப் பற்றிய விவரங்களைக் கொண்ட GP வாரியான நீர் பாதுகாப்புத் திட்டங்கள் (WSPs) நுண் நீர்ப் பாசனம், பயிர் பல்வகைப் படுத்தல், குழாய் இணைப்புகளைப் பயன்படுத்துதல் போன்ற தலையீடுகள் மற்றும் விநியோக பக்க தலையீடுகள் தடுப்பணைகள், பண்ணை குளங்கள், நீர் ரீசார்ஜ் தண்டுகள் மற்றும் பிற செயற்கை நீர் ரீசார்ஜ் / நீர் பாதுகாப்பு கட்டமைப்புகள் போன்றவை. நிலத்தில் ஏற்படும் சரிவைத் தடுக்கும் நோக்கத்துடன், தற்போதைய திட்டங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. நீர் மட்டம்.

(ஆ) முதல் (இ) இந்தத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படவில்லை.

தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 2219/MDS. பேரவை இணைப்பு எண். 762) நிர்வாகிகள் தேர்தலை பேரவைச் செயலாளர் எம்.சண்முகம் ஆணையாளராக பொறுப்பேற்று நடத்தி வைப்பார். தேர்தல் தொடர்பான விதிமுறைகள், கால அட்டவணை ஆகியவை தேர்தல் ஆணையாளரால் தனியாக வெளியிடப்படும்.

`அண்ணா அறிவாலயம்" சென்னை - 18. நாள்: 09.04.2025.

மு.சண்முகம் எம்.பி. பொதுச் செயலாளர், தொ.மு.ச. பேரவை

தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் தமிழ்நாடு சட்டமன்றத்தில் இயற்றப்பட்ட மசோதாக்களை தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கு எதிராகவும், அரசியலமைப்பு சட்டத்திற்கு விரோதமாகவும், நிறுத்தி வைத்திருந்த ஆளுநருக்கு எதிராக, தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ளதால் போடி நகர பஸ் நிலையத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன் எம்.பி. பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கி கொண்டாடினார். உடன் நகர செயலாளர் புருஷோத்தமன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சங்கர், நகர மன்ற தலைவர் ராஜேஸ்வரிசங்கர், நகர மன்ற உறுப்பினர் மகேஸ்வரன், நகர இளைஞரணி அமைப்பாளர் சேக் அப்துல்லா, மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.